**கவனிக்க.-** *30.12.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி (IV அ) பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி (IV அ) மற்றும் பகுதி (IV ஆ) இன சிங்கள மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1740 - 2012 ජනවාරි මස 06 වැනි සිකුරාදා - 2012.01.06
*1740 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 2 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2012, சனவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆணடு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## உடுபத்தாவ பிரதேச சபை

முன்னேற்றமடைந்த கிராமப் பகுதிகளாக பிரகடனப்படுத்தலுக்கான சபையின் பிரேரணையும் அதற்கான அங்கீகாரத்தை பிரகடனப்படுத்தலும்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் 1 ஆவது உபபிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடுபத்தாவ பிரதேச சபையினால் 2011 ஆம் வருடம் ஓகத்து மாதம் 24 ஆந் திகதி இடம்பெற்ற உடுபத்தாவ பிரதேச சபைக்கூட்டத்தில் தீர்மான இலக்கம் 8 - (viii) இன் கீழ் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் பிரேரணை அச்சட்டத்தின் மேலேயுள்ள உபபிரிவுகளினால் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரான டபிள்யூ. எம். எம். பீ. வீரசேகரவாகிய என்னால் இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்ளப்படுகின்றது.

டபிள்யூ. எம். எம். பீ. வீரசேகர,
உள்ளூராட்சி ஆணையாளர் (வடமேல்).

உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம்,
குருநாகல்
2011.12.20.

### பிரேரணை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 ஆவது பிரிவின் 1 ஆவது உபபிரிவினால் பிரதேச சபைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் உடுபத்தாவ பிரதேச சபையின் நியாயாதிக்கத்தினுள் அமைந்திருக்கும் பின்வரும் 1 ஆம் இலக்க அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும் எனவும் அதனை ஏற்றுச் செயற்படுத்த வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சிப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும் எனவும் உடுபத்தாவ பிரதேச சபைக்கு பிரேரணை முன்வைக்கப்படுகின்றது.

### அட்டவணை இல. 01

### முன்னேற்றமடைந்த கிராமப் பகுதிகளை மதிப்பீட்டு வரிக்கான நியாயாதிக்க எல்லையாக பிரகடனப்படுத்தல்

உடுபத்தாவ பிரதேச சபை

1. உடுபத்தாவ மாதம்பை பாதை :- உடுபத்தாவ முற்சந்தியில் இருந்து மாதம்பை தும்மலசூரிய நாற்சந்தி வரை (நியாயாதிக்க எல்லை வரை) பாதையின் மத்தியிலிருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் கி. மீ. 7 மீற்றர் 300.
2. உடுபத்தாவ குளியாப்பிட்டி பாதை :- உடுபத்தாவ முற்சந்தியில் இருந்து குளியாப்பிட்டி பாதையில் பல்லேவெல தொடக்கம் வரை (நியாயாதிக்க எல்லை வரை) பாதையின் மத்தியில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் கி. மீ. 02 மீற்றர் 500.
3. உடுபத்தாவ நாத்தாண்டிய பாதை :- உடுபத்தாவ முற்சந்தியில் இருந்து நாத்தாண்டிய பாதையில் துத்திரிபிடிய சந்தி வரை (நியாயாதிக்க எல்லை வரை) பாதையின் மத்தியிலிருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் கி. மீ. 09 மீற்றர் 300.
4. யகம்வெல தும்மலசூரிய பாதை :- யகம்வெல முற்சந்தியில் இருந்து தும்மலசூரிய பாதையில் பழைய கிராம சபை அலுவலகம் வரை பாதையின் மத்தியில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் மீற்றர் 400.
5. யகம்வெல தாவல்ல பாதை :- யகம்வெல சந்தியில் இருந்து தாவல்ல பாதையில் தம்மாலோக வித்தியாலயம் வரை பாதையின் மத்தியில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் மீற்றர் 400.
6. யகம்வெல திவுரும்பொல பாதை :- யகம்வெல சந்தியில் இருந்து திவுறும்பொல பாதையில் அஹதிய்யா சர்வதேச பாடசாலை வரை பாதையின் மத்தியில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் கி. மீ. 1 மீற்றர் 500.
7. எதுன்கஹகொடுவ திவுரும்பொல பாதை :- எதுன்கஹகொடுவ சந்தியில் இருந்து திவுறும்பொல பாதையில் முஸ்லிம் பள்ளிவாயில் வரை பாதையின் மத்தியில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் இரு மருங்கிலும் தூரம் மீற்றர் 200.
8. எதுன்கஹகொடுவ கெகுணாவெல பாதை :- எதுன்கஹகொடுவ சந்தியில் இருந்து கெகுணாவெல பாதையில் டயலொக் கோபுரம் வரை பாதையின் நடுவில் இருந்து 100 மீற்றர் என்ற அடிப்படையில் பரதையின் இரு மருங்கிலும் தூரம் மீற்றர் 600.
9. எதுன்கஹகொடுவ பராகெதர பாதை :- எதுன்கஹகொடுவ சந்தியில் இருந்து கந்தயாய பௌத்த விகாரை வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் கி. மீ. 01 மீற்றர் 200.
10. தும்மலசூரிய ஷாரிபுத்திர மாவத்தை :- தும்மலசூரிய ஷாரிபுத்திர மாவத்தையின் தொடக்கம் முதல் ஷாரிபுத்திர கனிஷ்ட வித்தியாலயம் வரை பாதையின் இரு மருங்கிலும் இருந்து 100 மீற்றர் தூரம் 900 மீற்றர்.
11. தும்மலசூரிய யகம்வெல பாதை :- தும்மலசூரிய துன்தொட பாலத்துக்கு அருகில் இருந்து சியம்பலாகஸ்ருப்ப ஜே. ஆர். ஜயவர்தன வித்தியாலயம் வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் கி. மீ. 01 மீற்றர் 300.

12. தும்மலசூரிய சந்தை பாதை :- தும்மலசூரிய வார சந்தைக்கு பக்கத்தால் செல்லும் பாதையின் இறுதிவரை பாதையின் இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் மீற்றர் 400.

13. தும்மலசூரிய மயான பாதை :- தும்மலசூரிய மயான பாதையின் இறுதி வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் மீற்றர் 575.

14. தும்மலசூரிய சாந்திகம பாதை :- தும்மலசூரிய சாந்திகம பாதையில் ஓரிட் அபரல் நிறுவனத்தைத் தாண்டி செல்லும் போது குறுக்கிடும் கால்வாய் வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் மீற்றர் 350.

15. வொஷின்டன் குணவர்தன மாவத்தை :- தும்மலசூரிய பொலிஸ் நிலையத்துக்கு பின்னால் உள்ள வொஷின்டன் குணவர்தன மாவத்தையின் ஆரம்பம் முதல் சாரிபுர மாவத்தை வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் மீற்றர் 800.

16. துத்திரிபிடிய மானின்கல பாதை :- துத்திரிபிடிய சந்தியில் மானிங்கல பாதையின் வயல் நடுவில் உள்ள "போக்கு" வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் கி. மீ. 01.

17. துத்திரிபிடிய ஹெவன பாதை :- துத்திரிபிடிய சந்தியில் இருந்து ஹெவன பாதை (கிராம மத்திய பாதை) யில் கோரவடிய வத்தை வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் கி. மீ. 1.

18. வெலிபென்ன கஹமுல்ல மாகந்துர பாதை :- வெலிபென்ன கஹமுல்ல நகரத்திலிருந்து மாகந்துர பாதையில் 15/2 "போக்கு" வரை பாதையின் மத்தியில் இருந்து இரு மருங்கிலும் 100 மீற்றர் என்ற அடிப்படையில் தூரம் மீற்றர் 500.

(1) உடுபத்தாவ மாதம்பை பாதை
(2) உடுபத்தாவ குளியாப்பிட்டி பாதை
(3) உடுபத்தாவ நாத்தாண்டிய பாதை
(4) யகம்வெல தும்மலசூரிய பாதை
(5) யகம்வெல தாவல்ல பாதை
(6) யகம்வெல திவுரும்பொல பாதை
(7) எதுன்கஹகொடுவ திவுரும்பொல பாதை
(8) எதுன்கஹகொடுவ கெகுணாவெல பாதை
(9) எதுன்கஹகொடுவ பராகெதர பாதை
(10) தும்மலசூரிய ஷாரிபுத்திர மாவத்தை
(11) தும்மலசூரிய யகம்வெல பாதை
(12) தும்மலசூரிய சந்தை பாதை
(13) தும்மலசூரிய மயான பாதை
(14) தும்மலசூரிய சாந்திகம பாதை
(15) வொஷின்டன் குணவர்தன மாவத்தை
(16) துத்திரிபிடிய மானின்கல பாதை
(17) துத்திரிபிடிய ஹெவன பாதை
(18) வெலிபென்ன கஹமுல்ல மாகந்துர பாதை

1-198

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2012***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ***சனவரி*** | .. | வெள்ளி | 06.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2011 |
| | | வெள்ளி | 13.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2011 |
| | | வெள்ளி | 20.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2012 |
| | | வெள்ளி | 27.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2012 |
| ***பெப்புருவரி*** | .. | வெள்ளி | 03.02.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2012 |
| | | வெள்ளி | 10.02.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2012 |
| | | வெள்ளி | 17.02.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2012 |
| | | வெள்ளி | 24.02.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.01.2012 |
| ***மாச்சு*** | .. | வெள்ளி | 02.03.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2012 |
| | | வெள்ளி | 09.03.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.02.2012 |
| | | வெள்ளி | 16.03.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2012 |
| | | வெள்ளி | 23.03.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2012 |
| | | வெள்ளி | 30.03.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*